# "எம். ஜி. ஆரையும், ராதாவையும் சந்திக்க முயலவில்லை"

## வாசு தொடர்ந்து சாட்சியம்

Registered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49
போன் 689
National Tamil Daily
மலர் 9
இதழ் 107
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க வைகாசி 15 ஸபர் 18 திங்கட்கிழமை [29-5-67]

மைலாப்பூர், மே 28

ஞாயிற்றுக்கிழமை தமிழ் நாட்டில் அரசாங்க வங்கி, விடுமுறை நாளாக இருப்பினும் எம். ஜி. ஆர். — எம். ஆர். ராதா வழக்கு விசாரணையை விரைவாக முடிக்க வேண்டுமென்பதால் சைதாப்பேட்டை மாஜிஸ்டிரேட் திரு. குப்புசாமி இன்றும் இவ்வழக்கை விசாரித்தார்.

எம். ஆர். ராதாவின் பணியாளரான முத்து இன்று சாட்சியமளித்தார்.

திரைப்பட நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனைச் சுட்டுக் கொலை செய்ய முயன்றதாகவும் தம்மைத் தாமே சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொள்ள எத்தனித்ததாகவும் திரைப்பட நடிகர் எம் ஆர். ராதா மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு சைதாப்பேட்டை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நான்காவது தினமாக இன்று தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

### ஐஸ் கட்டி கிடைக்கவில்லை

வெய்யில் வெப்பம் தாங்க முடியவில்லையென நேற்று முன்தினம் நீதிபதியிடம் புகார் செய்த எம். ஆர். ராதாவுக்கு ஐஸ் கட்டிகள் கொடுக்க அனுமதியளிக்க வேண்டுமென அவரது வழக்கறிஞர் தெரிவித்த யோசனையை நீதிபதி ஏற்றுக் கொண்ட போதிலும் சிறைச்சாலை டாக்டர் அதற்கு இன்னும் அனுமதி அளிக்காததால் நேற்றும் அவருக்கு ஐஸ்கட்டிகள் வழங்கப்படவில்லை. ஆனால் நீதிமன்றத்தின் கதவோரமாக காற்றுப் படக்கூடியதாக ராதாவுக்கு ஆசனம் போட்டுக் கொடுக்கப்பட்டது.

திரைப்படத் தயாரிப்பாளர் கே. வாசு நேற்றும் தொடர்ந்து சாட்சியமளித்தார்.

குறுக்கு விசாரணையின் எதிர்தரப்பு வழக்கறிஞரின் கேள்விகளுக்கு வாசு பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:

எனது பொருளாதாரக் கஷ்டங்களை நிவர்த்தி செய்து கொள்வதற்காகவே நான் திரைப்படம் தயாரித்தேன்.

நான் இனிமேலும் படம் தயாரிப்பதில்லை என்று முடிவு செய்தது, திரைப்படம் தயாரித்துத்தான் நான் வாழவேண்டுமென்பதில்லையென்றோ திரைப்படம் தயாரிக்க அவசியமில்லை என்ற அளவுக்கு எனது பொருளாதார நிலை சீரடைந்துவிட்டதென்றோ அர்த்தமல்ல.

டைரக்டர் பஞ்சுவை கடந்த இருபது வருடங்களாக எனக்குத் தெரியும். எனது குடும்பம் அவர் வீட்டுக்குச் செல்வதும் அவரது குடும்பம் எனது வீட்டுக்கு வருவதும் உண்டு. பஞ்சுவின் மனைவியையும் அவரது குடும்பத்தையும் எனக்குத் தெரியும். எனது மனைவியையும் எனது குடும்பத்தையும் பஞ்சுவுக்கும் தெரியும்.

### சந்திக்க முயலவில்லை

சூட்டுச் சம்பவத்தின்பின் எம். ஜி. ஆரையோ, எம். ஆர். ராதாவையோ சந்திக்க நான் முயற்சிசெய்யவில்லை.

இதைப் பப்ளிக்பிராசிகியூட்டர் சாட்சியை மறு விசாரணை செய்தபோது சாட்சி விளக்கிக் கூறினர்.

### தவறு செய்ததாக நினைத்தேன்

பப்ளிக் பிராசிக்கியூட்டரின் கேள்வி ஒன்றுக்கு

[6-ம் பக்கம் பார்க்க]

# தனிவாக்காளர் ஜாபிதா யோசனை நிராகரிப்பு

## கட்டாய நாடுகடத்தல் திருத்தமும் மறுக்கப்பட்டது

### நிரந்தரக்குழு முடிவு

கொழும்பு, ஞாயிறு

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைப் பிரஜாவுரிமை பெறுவோருக்கென தனிவாக்காளர் ஜாபிதா தயாரிக்கப்பட வேண்டுமென்றும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா செல்ல வேண்டிய ஐந்தேகால் லட்சம் இந்திய வம்சாவழியினரைக் கட்டாயமாக நாடுகடத்த வேண்டுமென்றும் எதிர்க் கட்சியினர் சமர்ப்பித்த திருத்தத்தை இலங்கை - இந்திய ஒப்பந்த அமுல் மசோதாவைப் பரிசிலனை செய்யும் பார்லிமெண்டரி நிரந்தரக் குழு நிராகரித்து விட்டது.

நேற்றிரவு 9-30 மணி வரை கூடிய இந்த நிரந்தரக் குழு பிரதமர் சமர்ப்பித்த ஏழு பேருக்கு நான்கு வீதம் பிரஜாவுரிமை வழங்க வேண்டுமென்ற திருத்தத்தை ஏற்றுக் கொண்டது.

நிரந்தரக் குழுவிடம் தமிழரசுக் கட்சியும் இ. தொ. காங்கிரஸ் தலைவரும் நியமன எம். பி. யுமான திரு. எஸ். தொண்டமான் சமர்ப்பித்திருந்த திருத்தங்களும் வாபஸ் பெறப்பட்டன.

நிரந்தரக் குழு தனது அறிக்கையை ஜூன் மாதம் இரண்டாம் திகதி சமர்ப்பிக்கும். மூன்றும் திகதி மசோதா இறுதிவடிவத்தில் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படும்.

## வங்காளத்தில் பொலிஸ் சுட்டது

### 4 பேர் பலி

புதுடில்லி, மே 28

மேற்கு வங்காளத்தில் இன்று இரு கோஷ்டிகளுக்கிடையில் நடைபெற்ற கைகலப்பையொட்டி பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேரிட்டதில் 4 பேர் கொலையுண்டனர். பொலிஸ்காரர் பலரும் காயமடைந்தார்கள். சம்பவம் நடைபெற்ற பகுதியில் 10 மணி நேர ஊரடங்குச்சட்டம் அமுலாக்கப்பட்டிருக்கின்றது.

## அடுத்தவருடத்தில் கிளிநொச்சி பட்டின சபையாகும்

### இவ்வருட இறுதியில் தேர்தல்

கிளிநொச்சி, திங்.

அடுத்த வருடம் முதலாம் திகதி முதல் கிளிநொச்சி கிராமசபை பட்டினசபை அந்தஸ்துக்கு உயர்த்தப்படவிருக்கிறது.

இதுபற்றிய அறிவித்தல் இம் மாதம் 18-ம் திகதிய அதிவிசேஷ அரசாங்க வர்த்தமானியில் வெளியாகியுள்ளது.

புதிய பட்டின சபையில் 7 வட்டாரங்கள் இருக்கும் எனவும் பட்டின சபைக்கான தேர்தல் இவ்வருட இறுதியில் நடைபெறுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டினசபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி தனது அபேட்சகர்களை நிறுத்தத் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

# தாதிகளின் உடைகளை கிழித்தது டாக்டர்களா?

யாழ்ப்பாணம், திங்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலுள்ள தாதிமார்களினதும் மருத்துவப் பெண்களினதும் விடுதிக்குள்ளிருந்த அவர்களது யூனிபோம்கள், மற்றும் ஆடைகள் ஆகியன சென்ற வெள்ளிக்கிழமை இரவு இனம் தெரியாத சில நபர்களால் கிழிக்கப்பட்டது சம்பந்தமாக விசாரணை நடத்திய யாழ்ப்பாணம் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. பொங்சோ இவ்விசாரணை பற்றிய அறிக்கையை பொலிஸ் தகவல் பகுதிக்கு நேற்றுக் காலை அனுப்பி வைத்தார்.

சம்பவம் நடந்த இரவு சில டாக்டர்களைக்கொண்ட ஒரு கோஷ்டியே இந்த வேலைகளைச செய்து சம்பந்தப்பட்டவர்களின் யூனிபோம்களையும், உடைகளையும் சேதப்படுத்தியதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி டாக்டர் இராஜாபிள்ளை இது சம்பந்தமாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியின் மேல் மாடியில் குடியிருக்கும் இளம் டாக்டர்களை விசாரணை செய்ததாகவும் தெரிகிறது.

[ந. நி]

## அறிவித்தல்

### ரஞ்ஜனி மில்ஸ்

சங்கானை பிரதான வீதியில் தபாற்கந்தோருக்கு முன்பாக அமைக்கப்பட்டிருக்கும் மில்லில் நெல் குத்தல், அரிசி, மிளகாய் அரைத்தல், புதிதாக அமைக்கப்பெற்றிருக்கும் யப்பான் கலரால் நெல் உடைத்தல், தேங்காய் எண்ணை ஊற்றுதல் சிறந்த தொழிலாளரைக் கொண்டு குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். 2306

# 'எதிரியும் மற்றும் இருவரும் சந்திராவை கடத்திசென்றனர்'

## உடுவில் கொலை முயற்சி வழக்கு

யாழ்ப்பாணம், திங்கள்

"எனதுமகள் பாக்கியம் ஒரு ஊமைப்பெண். அவளின் மகள் சந்திராவை எதிரியும், செல்லனும், முருகேசுவும் எங்களுக்குத் தெரியாமல் கடத்திச் சென்றனர். அதன்பின் பொலிஸார் சந்திராவிற்கு வயது காணாதென்றுகூறி தாயுடன் அனுப்பிவைத்தனர்."

உடுவில் கொலைமுயற்சி வழக்கில் வல்லி கைம்பெண் தெய்வி காட்சியமளித்த போது மேற்கண்டவாறு கூறினர். இவ்வழக்கு வட பகுதி அசைஸ் கோட்டில் நீதியரசர் வி. [illegible] விசாரணை செய்யப்பட்டது. எதிரிக்காக அரசாங்கத்தால் புறக்டர் ஏ. அன்ரனி நியமிக்கப்பட்டிருந்தார்.

தெய்வி மேலும் கூறியதாவது: சந்திராவை பொலிஸார் எங்களுடன் அனுப்பிய பின்னர் எதிரிவந்து என்னுடனும், இறந்த மகனுடனும் சமாதானம் பேசினர். சந்திராவை ஒற்றுமையாக இருக்க விடும்படி எதிரி கேட்டார். அதற்கு என் மகள் மறுத்துவிட்டார். சம்பவம் நடந்ததினம் 'அம்மா அம்மா' என்ற சத்தம் கேட்டது. அது இறந்தவரின் குரலென அடையாளம் கண்டுகொண்டேன். நெஞ்சைபொத்திக்கொண்டு ஓடிவந்தார் 'என்ன? என்ன?', என்றுகேட்டேன். தவசி கந்தையா குத்திப்போட்டு ஓடுமுன் என்று சைகை மூலம் காட்டினர். அது எனக்கு விளங்கியது."

இவ்வழக்கில் 65-ம் ஆண்டு டிசம்பர் 2-ம் திகதி உடுவிலில், வல்லி ஐயம்பிள்ளையை, தவசி கந்தையா கொலைசெய்ய முயற்சித்ததாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

இன்றைய உலகில் சிறிய நாடுகளுக்கு இடமில்லை என்பதை யுத்தம் தெளிவாக்கி விட்டது. சிறிய நாடுகள் தனியாக வாழ முடியாது. அவைகளின் கூட்டமைப்பு வேண்டுமானால் நிலை பெற முடியும்.

— ஜவஹர்லால்நேரு

ஈழநாடு

Eelanadu Natioal Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க ஞு வைகாசி மீ 15உ (29-5-67)

# 'ஆலய வீதி யாவர்க்கும் பொது'

— அர்ச்சகர்

## ஆலயங்களைத் திறந்துவிடும் பணியில் இந்துமாமன்றம்

யாழ்ப்பாணம்; திங்கள்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில், நல்லூர் சிவன் கோவில், கைலாயபிள்ளையார் கோவில், வண்ணை சிவன்கோவில்; வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் வீரமாகாளி அம்மன் கோவில், புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி கோவில், நயினை நாகபூஷணி அம்மன் கோவில் களிலும் இன்னும் காங்கேசன்துறை, இணுவில். சுதுமலை ஆகிய இடங்களிலுள்ள சில கோவில்களிலும் எல்லா சைவர்களும் எவ்விதபேதமுமின்றிப் புனிதமுடன் உட்சென்று வழிபாடு செய்கின்றனர். அங்கு எவ்வித பிரச்னைகளுமிருக்கவில்லை. மற்றைய ஆலய தர்மகர்த்தாக்களும் இதையுணர்ந்து புனிதமாக வரும் யாவருக்கும் தமது கோவில்களை ருக்கும் திறந்த்விட வேண்டும் என அகில இலங்கை இந்துமாமன்ற ஆலயப்பிரவேச யாழ்ப்பாண உப குழுவில் நடைபெற்ற கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப் பட்டது.

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு திரு. த. முத்துசாமிப்பிள்ளை தலைமை வகித்தார். மன்ற உபதலைவர் திரு. கு. பாலசிங்கம், பொருளாளர் திரு. மு. செ. கந்தையா, திரு. ச. தி. சின்னத்துரை ஜே. பி., சி. கந்தையா, டாக்டர் சி. சரவணமுத்து, சி. க, வேலாயுதபிள்ளை, வ. நடராசா, யாழ். ஆலயப்பிரவேச உப குழுத்தலைவர் முதலியார் செ. சின்னத்தம்பி ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். யாழ்ப்பாணத்திலுள்ள 38 இளைச் சங்கங்களின் பிரதிநிகள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில், யாழ். ஆலயப்பிரவேச உப குழு கிராமந்தோறும் சமாதானமானமுறையில் ஆலயங்களைத் திறந்து வைக்க உதவியாக சிறுசிறு குழுக்களை அமைத்துள்ளதாகவும், ஆலயப்பிரவேச முயற்சிகளில் திருவாளர்கள் மு. வைரமுத்துவும் ச. அம்பிகைபாகனும் எடுத்துவரும் பங்குபற்றியும் தலைவர் கூறினார். இந்துமாமன்றக் குழுவினர் பல கோவில்களுக்கும் சென்று தர்மகர்த்தாக்களுடன் பேசி ஆலயங்களைத்திறக்க முயற்சிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

### திருநெல்வேலி அம்மன் கோவில்

திருநெல்வேலி அரசடி அம்மன் கோவில் வழிபாட்டு முறைகளை அதன் கர்த்தாக்கள் வெளிப்படுத்தினால் அம்முறைகளை ஏற்றுக் கொள்ளும் அன்பர்கள் ஆலயத்துள் பிரவேசிக்க அனுமதிக்கப்படலாம் என ஆலயப்பிரவேசக் கருத்தரங்கு ஒன்றில் கூறப்பட்டது. இவ்வாலயத்தில் நடந்த கருத்தரங்கிற்கு திரு. கு. பாலசிங்கம் தலைமை வகித்தார். மகிழ்ச்சியுடன் புனிதமாக ஆலயத்துள் வழிபடுபவர்களைப் பார்த்து மற்றவர்கள் மனமாற்றமடையக் கூடும் எனவும் கருதப்பட்டது, ஆலயப்பிரவேசத்துக்கு ஆதரவாகவும் அ. இ. இந்து மாமன்றத்துக்கு உதவியாகவும் ஒரு குழு அமைக்கப்பட்டது. திரு. சி சுப்பிரமணியம் தலைவராகவும், திரு. தா. சிவபாதசுந்தரம் காரியதரிசியாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

### ஓர் அனுபவம்

வட பகுதியிலுள்ள ஒரு முக்கிய நகரில் ஒரு கோவில் நிர்வாக அறையில் அர்ச்சகருடன் உரையாடிக்கொண்டிருந்த போது இந்து மாமன்றப் பிரதிநிதிகளுக்கு வியப்பளிக்கும் ஓர் அனுபவம் ஏற்பட்டது. பூக்கட்டுடனும் முருங்கைக்காய்க் கட்டுடனும் ஒருவர் வந்து இன்முகம் காட்டிச் சென்றார். கோவிலுக்கு பூவும் அர்ச்சகருக்கு முருங்கைக் காயும் கொண்டு வந்த அவரைப்பற்றி அறிய விரும்பிய பிரதிநிதிகளுக்கு, இந்து மாமன்றத்தினர் இப்போது செய்துவரும் புனிதப் பணியை அவ்வாலயம் எப்போதோ மேற்கொண்டு விட்டதாகக் கூறிய அர்ச்சகர், அவ்வன்பர் பலகாலம் வெளியே நின்று வழிபட்டதாகவும், இப்போதெல்லாம் கோவிலினுள் சென்று வணங்குவதாகவும் சொன்னார். ஆலய வழிபாட்டு முறைகள் ஒருபகுதியினருக்கு மட்டுமன்றி எல்லோருக்குமே உரியதென்றும், பக்தி வைராக்கியத்துடன் வழிபாடு செய்பவர்களுக்கு எல்லோரும் வசதி செய்து கொடுப்பதே நியாயமென்றும் அவர் கூறினார். இந்து மாமன்றத்தின் பணியினையும் அவர் பாராட்டினார்.

## கல்வி இலாகாவின் விபரீத போக்கு

வடபகுதியிலுள்ள நூற்றுக்கு மேற்பட்ட கலைப்பட்டதாரி ஆசிரியர்களை வடபகுதிக்கு அப்பால் திடீர் இடமாற்றம் செய்ய கல்வி இலாகா நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. இது உண்மையானால் கல்வி இலாகா உண்மையில் கல்வி விருத்தியைக் கருத்தில் கொண்டுதான் இயங்குகிறதா? என்ற ஐயம் எவருக்கும் எழக்கூடும்.

வடக்குப்பகுதி தவிர்ந்த இதர மாகாணங்களிலுள்ள பாடசாலைகளில், கல்லூரிகளில் கலைப்பட்டதாரிகளுக்குத் தட்டுப்பாடு இருந்தால் அல்லது அப்பகுதிகளிலுள்ளபிள்ளைகளுக்கு நல்ல கல்வியறிவு ஊட்டுவதற்கு கலைப்பட்டதாரி ஆசிரியர்களின் சேவை அவசியமெனக் கல்வி இலாகா கருதினால் வேலையில்லாதிருக்கும் கலைப்பட்டதாரிகளை அப்பகுதியில் நியமிக்கலாம் அல்லது அவர்களுக்கு ஆசிரியப் பயிற்சி அளித்து புதிய நியமனம் கொடுக்கலாம். புதிய நியமனம் கொடுக்கமுடியாவிடினும் தேவைக்கதிகமான பட்டதாரிஆசிரியர்கள் இருந்தால் அந்தஇடத்திலிருந்து அவர்களை ஒழுங்குமுறையாக மாற்றம் செய்யலாம். ஆனால் வடபகுதியிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட கலைப்பட்டதாரி ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய உத்தேசிக்கப்படுவதற்குக் கூறும் காரணம்தான் வேடிக்கையாக இருக்கிறது.

பட்டதாரி ஆசிரியர்கள் தமது பட்டப்படிப்புக்கு எடுத்த விசேஷ பாடத்தில் பத்து மணி நேரமாவது படிப்பிக்க வேண்டுமென்று சமீபத்தில் கொழும்பிலிருந்து இங்குவந்து 'ஆராய்ச்சி' நடத்திய கல்விஇலாகா 'பரிசிலனைக்குழு' தெரிவித்ததாம். இதுவரை இந்த விதி பயிற்றப்பட்ட விசேஷ ஆசிரியர்களுக்கே இருந்து வந்தது. கலைப் பட்டதாரி ஆசிரியர்கள், அவர்கள் பட்டப்படிப்புப் பெற்ற விசேஷ பாடத்தில் பத்துமணி நேரம்கூடப் படிப்பிப்பதற்கு இடமில்லை என்பதால்தான் நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களை கல்வி இலாகா திடீர் இடமாற்றம் செய்யத் திட்டமிட்டிருக்கிறதாம்.

கலைப் பட்டதாரி ஆசிரியர்கள் அவர்கள் பட்டப்படிப்புக்கு எடுத்த விசேஷ பாடத்தில்தான் படிப்பிக்க வேண்டுமென்றால் ஏற்கனவே, ஆங்கிலம் குடியியல், பூமிசாஸ்திரம், சமயம் ஆகிய பாடங்களைப் படிப்பிப்பதற்கு உள்ள ஆசிரியர் பற்றுக்குறை மேலும் மோசமடையுமென எதிர்பார்க்கலாம். ஆங்கிலப் பட்டதாரி ஆசிரியர் சமயபாடம் கற்பிக்கக் கூடாதென்றோ பொது அறிவு போதிக்கக் கூடாதென்றோ கல்வி இலாகா எதிர்பார்க்கிறதா? பட்டதாரி ஆசிரியர்கள், அவர்கள் பட்டம்பெற்ற விசேஷ பாடத்தில் மட்டும்தான் கல்வி கற்பிக்க வேண்டுமென்பது கல்வி போதனையில் மோசமான நிலையை ஏற்படுத்துவதுடன் ஆசிரியர்களையும் மாணவர்களையும்கூட வெறும் 'புத்தகப்பூச்சி'களாக்கவே உதவி செய்யும். இதர நாடுகளில் பட்டதாரி ஆசிரியர்கள் ஒரு குறிப்பிட்ட பாடத்தில் மட்டுமல்லாது பல பாடங்களையும் போதிக்கிறார்கள்.

கலைப்பட்டதாரி ஆசிரியர்களை திடீரென வடபகுதியிலிருந்து இடமாற்றம் செய்வது அந்த ஆசிரியர்களுக்கு மட்டுமல்லாது இடைநடுவில் ஆசிரியர்களை மாற்றுவதால் மாணவர்களே பெரிதும் பாதிக்கப்படுவர். ஆசிரியர்களை இடை நடுவில் இடமாற்றம் செய்தால் அவர்களுக்குப் பதிலாக நியமிக்கப்படும் ஆசிரியர்களும் கலைப்பட்டதாரிகளா? அப்படியானால் இவர்களை இங்கிருந்து இடமாற்றம் செய்ய வேண்டிய அவசியமென்ன? பதில் நியமனம் இல்லையெனில் பிள்ளைகளின் நிலைஎன்ன?

வடபகுதியிலிருந்து பட்டதாரி ஆசிரியர்களை அகற்றுவதற்கு கல்வி இலாகா எடுக்கும் முதல் நடவடிக்கைதானா இது? கல்வி இலாகாவின் இந்த விபரீத யோசனை ஆரம்பத்திலேயே கிள்ளி எறியப்பட வேண்டும்.

## 'புதிய திட்டம் ஒருவரப்பிரசாதம்'

செட்டிபாளையம், திங்கள்

"நம் தேசிய வருவாயை அதிகரிக்க நாமே நமது விவசாய உற்பத்தியைப் பெருக்குவது அவசியமாகும். எமது உணவு கிராம விவசாயிகளால் உற்பத்தி செய்யப் படுகின்றது. விவசாயிகளுக்குக் கடன் வசதிகள் உரிய வேளையிலும், இலகுவான விதத்திலும் கிடைத்தால் மாத்திரமே விவசாய உற்பத்தியைப் பெருக்கமுடியும். கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து இப்போதிருப்பதை விட மிகவிரைவில் விவசாயிகளின் கடன்தேவைகளைப் பெற அவர்களுக்கு இடமளிக்கும் விவசாயக் கடன்களுக்கான புதிய திட்டம் ஒரு வரப்பிரசாதமாகும்.

இவ்வாறு விவசாய உணவு அமைச்சினால் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## யாழ்ப்பாணம் வரும் இன்ஸ்பெக்டர் ஜெனரல்

### பொலிஸ்-இராணுவ அதிகாரிகளுடன் ஆலோசனை செய்வார்

யாழ்ப்பாணம், திங்கள்

இம் மாதம் 31-ம் திகதி யாழ்ப்பாணத்துக்கு உத்தியோக. பூர்வமாக விஜயம் செய்யும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபயகுணவர்த்தன அன்று மாலை வல்வெட்டித் துறைக்கு விஜயம் செய்யவிருக்கின்றார். அண்மையில் வல்வெட்டித்துறையில் பொலிசாருக்கும் பொது மக்களுக்குமிடையில் ஏற்பட்ட அசம்பாவிதத்தை அடுத்து துப்பாக்கிச் சூடு நடந்த இடத்துக்கு அவர் நேரில் சென்று பார்வையிடவிருக்கின்றார்.

31-ம் திகதி காலை திரு. அலரிக் அபயகுணவர்த்தன விசேஷ விமானம் மூலம் பலாலி விமானநிலையத்தை வந்தடைவார். வடமாகாண பொலிஸ் சுப்பிரின்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் வடபகுதி கள்ளக்குடியேற்றத் தடுப்பு சுப்பிரின்டன்ட் திரு. லயனல் சேனநாயக்கா ஆகியோர் அவரை விமான நிலையத்தில் சென்று வரவேற்பார்கள். திரு. அலரிக் அபயகுணவர்த்தனவுடன் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. டபிள்யு. பி. எப். பெர்ணன்டோ, தலைமைக் காரியாலய பொலிஸ் சுப்பிரின்டன்ட் திரு. வெரப்பிட்டியா, திட்டப் பகுதி பொலிஸ் சுப்பிரின்டன்ட் திரு இராஜசிங்கம் ஆகியோரும் யாழ்ப்பாணம் வருகின்றார்கள்.

அன்று காலை 11-30 மணிக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரின்டன்ட் அலுவலகத்தில் பொலிஸ் இராணுவ அதிகாரிகளைக் கொண்ட உயர்தர மகாநாடு நடைபெறும். இம் மகாநாட்டில் இராணுவ கமாண்டர் திரு. மொரிஸ் ஜெயவீரா, லயனல் சேனநாயக்கா, உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன்களான திருவாளர்கள் தவராஜா, வீரசிங்கா, லியனகே, அபயசேகரா ஆகியோர் கலந்துகொள்வார்கள். பொலிஸ் பொது மக்கள் நல்லுறவு, கள்ளக் குடியேற்றத் தடுப்பு, கள்ளக் கடத்தல் ஒழிப்பு ஆகியனபற்றி இம் மகாநாட்டில் ஆராயப்படும். திரு. அலரிக் அபயகுணவர்த்தன அன்றிரவே விசேஷ விமானத்தில் கொழும்பு திரும்புவார். [ந. நி.]

## நாட்டிலும் நகரிலும்

இந்தியாவில் ஒவ்வொரு மூன்று விநாடிகளுக்கும் இரண்டு குழந்தைகள் பிறக்கின்றனவென்று குடும்பக் கட்டுப்பாட்டு இலாகாவின் உதவி அதிபர் தெரிவித்திருக்கிறார். உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடும் பீஹார் மாகாணத்தில் ஒவ்வொரு பதினைன்கு விநாடிக்கும் ஒரு குழந்தை பிறக்கிறது. உலகத்தின் முழு நிலப்பரப்பிலும் இந்தியாவின் நிலப்பரப்பு ஆக இரண்டரை வீதம்தான். ஆனால் அதன் சனத்தொகையோ உலக சனத்தொகையில்பதினைன்கு வீதமானது. அதாவது, மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், சனத்தொகைக்கு ஏற்ற அளவு நிலப்பரப்பு இந்தியாவில் இல்லை.

மேற்படி விகிதப்படி பார்த்தால் நிமிடத்திற்கு 40 குழந்தைகளும், மணிக்கு 2,400உம், நாள் ஒன்றுக்கு 57,600உம் பிறக்கின்றன. ஒரு வருடத்தில் ஒரு கோடியே 736,000 குழந்தைகள்!

ருெக்கட் வேகத்தில் ஏறிக்கொண்டு போகும் சனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இந்திய அரசாங்கம் பகீரதப் பிரயத்தனங்கள் செய்து வருகிறது. நாட்டிலுள்ள சந்து, பொந்து, சாவடியெல்லாம் குடும்பக்கட்டுப் பாட்டுக் கிளினிக்குகளை அமைத்து, குடும்பக்கட்டுப்பாட்டின் அவசியத்தை வற்புறுத்தி, அவ்வித கட்டுப்பாட்டுக்குத் தேவையான மருந்துகள், கருவிகளையும் பொதுமக்களுக்கு அளித்து வருகிறது. குடும்பக்கட்டுப்பாட்டுக்கென்றே ஒரு தனி இலாகாவும், தனி அமைச்சும் இருக்கின்றன.

கர்ப்பம் உண்டாவதைத் தடுப்பதோடு நின்றுவிடாமல், கரு உண்டான பின் அதை அழிப்பதைச் சட்டபூர்வமாக்கும் அளவிற்கு இந்திய அரசாங்கம் சனத்தொகைப் பெருக்கத்தைத் தடுப்பதில் முனைந்திருக்கின்றது.

சனத்தொகைப் பெருக்கம் இந்தியாவுக்கு மட்டும் உரித்தான ஒரு பிரச்னையல்ல. உலகெங்கணுமே இதைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள். சனங்கள் பெருத்துவரும் போக்கில் இன்னும் சில ஆண்டுகள் கழிந்தால் உலகில் வாழும் மானிடர் எல்லோருக்கும் எப்படி உணவு அழிப்பது என உணவு அதிகாரிகள் கவலைகொள்கிறார்கள். வசிப்பதற்கு நிலம் போதாதே என்று வேறு சிலர் அங்கலாய்க்கிறார்கள்.

சமுத்திரங்களில் வளரும் பாசி வகைகளை உணவாக்கிக்கொள்ளவும், சமுத்திரத்தில் வீடு கட்டி வாழ்வதற்கும் முயற்சிகள் நடக்கின்றன.

குடும்பக் கட்டுப்பாடு என்பது ஒரு மிகவும் மென்மையான விஷயம். புத்திர பாக்கியம் ஆண்டவனால் மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட வரப்பிரசாதம் என்றும், இயற்கைக்கு விரோதமாகச் செயற்கை முறையில் பிள்ளைப்பேற்றைத் தடை செய்வது அந்த ஆண்டவனுக்கே அடுக்காதென்றும் உலகிலுள்ள முக்கியமான மதங்கள் எல்லாமே கூறுகின்றன. செயற்கையான தடைமுறைகளைத் தாம் விரும்பவில்லை என்று சமீபத்தில் போப்பாண்டவர் இந்திய சுகாதார, குடும்பக் கட்டுப்பாடுமந்திரி டாக்டர் சந்திரசேகரிடம் தெரிவித்திருக்கிறார். அவருடைய விருப்பத்துக்கு மாறாக உலகில் வாழும் அத்தனை கத்தோலிக்க மதத்தவரும் போகமாட்டார்கள். இவ்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. நா. அவசரகால படையின் கனடாபிரிவு

# 48 மணி நேரத்தில் வெளியேற ஐ. அ. குடியரசு உத்தரவு

## சமாதானத்துக்கான ஆபத்து பற்றி யு தாண்ட் கவலை

கெயிரோ, மே 28

ஐ நா: அவசரகாலப் படையின் கனடாப் பிரிவை 48 மணித்தியாலங்களில் ஐ அ குடியரசு நிலத்திலிருந்து வெளியேறுமாறு ஐ. அ. குடியரசு உத்தரவிட்டுள்ளது.

ஐ. அ. குடியரசு ஜனாதிபதி நாஸர், ரஷ்யாவிடம் ஆயுதம் கோரியதற்கு ரஷ்யப் பிரதமர் கொஸிஜின் பதிலளித்துள்ளதாகக் கெயிரோ வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. ரஷ்யப் பிரதமரின் பதிலடங்கிய குறிப்பை ஐ. அ. குடியரசிலுள்ள சோவியத் தூதுவர், நாஸரிடம் நேற்றுக் கொடுத்தார் இதைத் தொடர்ந்து நாஸர் பிரெஞ்சு தூதுவரை அழைத்து, அவருடன் 40 நிமிடங்கள் பேசினார்.

மேற்கு ஆசிய நிலைமை பற்றி ஐ. நா. பந்தோபஸ்து சபையின் அவசர கூட்டமொன்றை நாஸர் கோரியுள்ளார். இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக் கொள்கையை விவாதிக்க இச் சபை கூடவேண்டுமென நாஸர் தமது கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### யுதாண்ட் அறிக்கை

ஐ. நா. பந்தோபஸ்து சபைக்குச் சமர்ப்பிக்கத் தயாரித்துள்ள தமது அறிக்கையில், மேற்கு ஆசியாவில் சமாதானத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் அதைச் சுமுகமாகத் தீர்க்கப் போதிய அவகாசம் தேவையென்றும் ஐ. நா. பொதுக் காரியதரிசி யு தாண்ட் குறிப்பிட்டுள்ளார்.

ஐ. அ. குடியரசு - இஸ்ரேல் எல்லையில் ஐ. நா. சமாதானப் படைக்குப் பதிலாக ஐ. அ. குடியரசு, சிரியா, இஸ்ரேல் துருப்புகளடங்கிய இணைப்புப் படையொன்றை நிறுத்துவது பற்றி யு தாண்ட் ஆலோசனை தெரிவித்தார்.

அக்காபா வளைகுடா பந்தனம் பற்றிய தமது ஆழ்ந்த கவலையையும் யு தாண்ட் தெரிவித்துள்ளார். அக்காபா வளைகுடா விவகாரம் மேற்கு ஆசியாவில் சமாதானத்துக்குப் பங்கம் ஏற்படுத்தக் கூடிய பல காரணங்களில் ஒன்றுகுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

மேற்கு ஆசியாவில் 1948-ம் வருடத்தைய கட்டாய போர் நிறுத்த உத்தரவை ஐ. நா. பந்தோபஸ்து சபை புதுப்பிக்க வேண்டுமெனவும் யுதாண்ட் ஆலோசனை தெரிவித்தார்.

மேற்கு ஆசியாவில் சமாதானம் காணத் தம்மாலான எல்லா முயற்சிகளையும் தாம் தொடர்ந்து மேற்கொள்வதாகயுதாண்ட் உறுதியளித்தார்.

ஐ. நா. பந்தோபஸ்து சபை இன்றோ அல்லது நாளையோ கூடும் சந்தர்ப்பம் இருப்பதாகத் தெரியவில்லை. அச்சபையைக் கூட்டுவதற்கு எந்த மேற்கத்தைய நாடு முயற்சி செய்தாலும், அம்முயற்சியை சோவியத் யூனியனும், அதைச் சார்ந்த நாடுகளும், ஆபிரிக்க ஆசிய நாடுகளும் அம்முயற்சியை எதிர்க்கும்.

### எச்சரிக்கை

இஸ்ரேல் ஆக்கிரமிப்பில் இறங்கினால், மேற்கு நாடுகளுக்கு எண்ணெய் விநியோகத்தை துண்டித்து விடுவதாக சவுதி அரேபியா எச்சரித்துள்ளது இந்த எச்சரிக்கையை, பெய்ரூட்டில் உள்ள சவுதி அரேபிய தூதுவர் வெளியிட்டார். குவெயித்தும் மேற்கு நாடுகளுக்கு இதே போன்ற எச்சரிக்கையை விடுத்துள்ளது. குவெயித்தில் அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும் பெருமளவில் எண்ணெய் சொத்துக்கள் உண்டு.

### பாப்பரசர் செய்தி

மேற்கு ஆசியாவில் சமாதானத்தை நிலைநாட்டுமாறு ஐ. அ. குடியரசுக்கும், இஸ்ரேலுக்கும் அனுப்பியுள்ள ஒரு செய்தியில் பாப்பரசர் கேட்டுள்ளார்.

### கடைசிச் செய்தி

ஜனாதிபதி நாஸரின் வேண்டுகோளைத் தொடர்ந்து, ஐ. நா. பந்தோபஸ்து சபை நாளை கூடத் தீர்மானித்திருப்பதாகக் கடைசியாக வந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

---

## நைஜீரியாவில் அவசரகால நிலை பிரகடனம்

### கிழக்கு பகுதியின் பிரிவினை முடிவு

லாகோஸ், மே 28

நைஜீரியாவில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. நைஜீரியாவின் இராணுவ ஆட்சித் தலைவர் கேர்ணல் கோவான் நேற்று இந்த உத்தரவை நாடெங்கும் பிறப்பித்தார்.

நைஜீரியாவிலிருந்து தனி ராஜ்யமாகப் பிரிந்துவிடுவது என்ற கிழக்கு நைஜீரிய ஆலோசனைச் சபையின் முடிவைத் தொடர்ந்தே அவசரகாலநிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

### ஆபத்து

நாட்டுமக்களுக்கு விடுத்த வானொலிச் செய்தியொன்றில், நைஜீரியா ஓர் அரசியல் உருவாக இருப்பதற்கே ஆபத்து ஏற்பட்டுள்ளதாக கேர்ணல் கோவான் தெரிவித்தார்.

நைஜீரியாவை 12 பிரிவுகளாகப் பிரிக்கும் கட்டளைச் சட்டமொன்றைக் கேர்ணல் கோவான் பிறப்பித்தார். இவற்றில் 3 பிரிவுகள் கிழக்கு நைஜீரியாவில் அடங்கும்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ், பொலிஸாருக்கும், இராணுவத்தினருக்கும் விரிவான அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

---

## பஸ் போக்குவரத்து பூரண தேசியமயம்

### கருணாநிதி அறிவிப்பு

உதகமண்டலம், மே 28

பஸ்போக்குவரத்து இப்போது முழுதாகத் தேசியமயமாக்கப்படவில்லை. விரைவில், ராஜ்ய பஸ் போக்குவரத்தை முழுவதாகத் தேசிய மயமாக்குவதென தமிழக அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இவ்வாறு தமிழக அரசாங்க பொதுத்துறை மந்திரி திரு. மு. கருணாநிதி, உதகமண்டலத்தில் ராஜ்ய போக்குவரத்து பஸ் நிலையமொன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார். இந்த நிலையம், 2 லட்சத்து 75,000 ரூபாய் செலவில் கட்டப்பட்டது.

---

கேரளா

## உணவு விநியோகத்தில் பாரபட்சம் இல்லை

### ஜகஜீவன்ராம் கூறுகிறார்

புது டில்லி, மே 28

கேரளத்துக்கு உணவு விநியோகம் செய்வதில் பாரபட்சம் எதுவும் காட்டப்படவில்லையென மத்திய உணவு மந்திரி திரு. ஜகஜீவன் ராம் இங்கு தெரிவித்தார்.

கேரளத்துக்கு அனுப்பப்படும் உணவு, கடந்த இரண்டு மாதங்களாகக் குறைந்துள்ள தென்பதை அனுமதித்த உணவு மந்திரி, அதற்கான காரணங்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவையாகும் என்று கூறினார்.

பர்மாவிலிருந்து அரிசி வருவதில் தடை ஏற்பட்டுள்ளதாகவும், ஆந்திராவில் இரண்டாவது போக விளைச்சல் இல்லையென்றும் திரு. ஜகஜீவன் ராம் கூறினார்.

கேரளத்துக்கு உணவு விநியோகம் செய்வதில், மத்திய அரசாங்கம் தன்னாலான முயற்சிகள் எல்லாம் மேற்கொண்டே வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

---

## தேயிலைத் தோட்ட தொழிலாளருக்கு பென்ஷன்

ஷில்லாங், மே 28

ராஜ்ய தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு பென்ஷன் உரிமைகள்வழங்க அஸ்ஸாம் அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

இத் திட்டத்தினால், 35 லட்சம் தொழிலாளர்கள் நன்மையடைவார்கள்.

பென்ஷன் உரிமைகளை விரைவில் அமுல் செய்யும் வகையில், தற்போதைய தொழில் சட்டங்களில் தேவையான மாற்றங்கள் செய்யப்படும்.

---

## ஜபால் பூரில் அமைதி

ஜபால்பூர், மே 28

அண்மையில் கலவரம் நடைபெற்ற ஜபால்பூரில் மேலும் 24 மணித்தியாலங்களுக்கு ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்பட்டது. அது நாளை முற்பகல் 11 மணி வரைக்கும் நீடிக்கும்.

இன்று ஊரடங்குச் சட்டத்தில் 6 மணிநேர அவகாசம் அளிக்கப்பட்டது. பொதுமக்கள் தமக்கு வேண்டிய பொருட்களை வாங்குவதற்கென இன்று முற்பகல் 11 மணியிலிருந்து மாலை 5 மணிவரை சட்டம் தளர்த்தப்பட்டுள்ளது.

ஜபல்பூரில் இப்போது அமைதி நிலவுகிறது.

---

## பிரிட்டிஷ்தூதுவர் வெளிநடப்பு

பிகிங், மே 28

பிகிங்கில் நடைபெற்ற ஒரு வரவேற்புபசாரத்தில் பங்குபற்றிய பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகள், பிரிட்டிஷ் எதிர்ப்புப்பேச்சு அங்கு நிகழ்த்தப்பட்டபோது, அங்கிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

---

## பஸ் விபத்தில் 30 பேர் காயம்

### இருவர் நிலை கவலைக்கிடம்

புதுடில்லி, மே 28

மத்திய பிரதேசத்தில் நடைபெற்ற ஒரு பஸ்விபத்தில், 30 பேர் காயமுற்றனர். பஸ் தடம்புரண்டு, தலை கீழாக விழுந்தது.

காயமுற்றவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். இருவர் நிலை கவலைக் கிடமாக உள்ளது.

---

## புதுடில்லிக்கு பீகார் பிரதமர்

பீகார், மே 28

பீகார் முதல் மந்திரி திரு. சின்ஹா செவ்வாயன்று புதுடில்லிக்குச்செல்வார். அங்கு அவர் பிரதமர் திருமதி இந்திரா காந்தியையும், மத்திய உணவு மந்திரி திரு. ஜகஜீவன் ராமையும் சந்தித்துப் பேசுவார். அச்சந்தர்ப்பத்தில், பீகார் ராஜ்யத்தில் நிலவும் மோசமான உணவு நிலைமைபற்றி அவர், அவர்களுக்கு எடுத்துரைப்பார்.

---

## அரிசி கொண்டு செல்ல தடை

கல்கத்தா, மே 28

இரவு நேரத்தில் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு அரிசிகொண்டு செல்வதை மேற்கு வங்காள அரசாங்கம் தடைசெய்துள்ளது. முன்கூட்டியே பெர்மிட் வாங்கியவர்கள் மட்டும் இத்தடை உத்தரவுக்கு விதி விலக்காவர்.

மாலை 7 மணியிலிருந்து காலை 6 மணி வரைக்கும் இத்தடை உத்தரவு அமுலிலிருக்கும். இந்த உத்தரவு நேற்றுப் பிறப்பிக்கப்பட்டது.

---

## கோர பஸ் விபத்தில் 40 பேர் மரணம்

### சேலம் மாவட்டத்தில் நடந்தது

சென்னை, மே 28

சேலம்மாவட்டத்திலுள்ள நாணக்கல் என்னுமிடத்திலிருந்து சிறிது தொலைவில் ஏற்பட்ட பஸ் விபத்தொன்றில் 40 பிரயாணிகள் இறந்தனர், 22 பேர் காயமடைந்தனர். பள்ளப்பிட்டியிலிருந்து நாணக்கல் சென்று கொண்டிருந்த இந்த பஸ், சுவரொன்றுடன் மோதிப் பின் கிணற்றுக்குள் விழுந்ததாக அறியப்படுகிறது.

---

## அமெரிக்கா தயார்

வாஷிங்டன், மே 28

வியட்னாமில் சமாதானம் நிலைநாட்டுவதற்கான எந்த நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளிலும் அமெரிக்கா பங்குபற்றத் தயாராகஇருப்பதாக அமெரிக்க ராஜாங்க வெளியுறவுக் காரியதரிசி டீன் ரஸ்க் இங்கு தெரிவித்துள்ளார்.

---

## சென்னையில் கடும் உஷ்ணம்

சென்னை, மே 28

சென்னையில் இன்று உஷ்ணம் 108.4 டிகிரியாக உயர்ந்துள்ளது. முன்னர் உஷ்ணம் 107.6 டிகிரியாக இருந்துள்ளது. 51 ஆண்டுகளுக்கு முன்புமீனபாக்கத்தில் உஷ்ணம் 113 டிகிரியாக பதிவாகியது. பல ஆண்டுகளுக்குப்பின்னர் இப்போது மீண்டும் உஷ்ணம் அதிகரித்துள்ளது.

---

## சென்னை ஆலைகள் விவகாரம

சென்னை, மே28

சென்னையில் மூடப்பட்டுள்ள துணிஆலைகள்பற்றி விசாரிக்க தமிழகஅரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட முக்கூட்டுக்கமிட்டி, ஆலைகளைத்திறந்து நடாத்துவதற்கு ரூ.5தொடக்கம் ரூ15 லட்சம் வரை வங்கியிலிருந்து கடனுதவி பெற்றுக்கொடுக்க வேண்டுமென்று சிபார்சு செய்துள்ளது,

கடனுதவி பற்றித்தமிழக தொழில் மந்திரி திரு.இரா நெடுஞ்செழியன் அடுத்த மாதம் முதல் வாரத்தில் வங்கி அதிகாரிகளைச்சந்தித்துப்பேசுவாரெனத் தெரிகிறது.

முதலாளிகளும் தொழிலாளிகளுமடங்கிய தொழிலாளர் நலக் கமிட்டி நிதிக்கமிட்டி முதலியன நியமிக்கப்படவேண்டியஅவசியத்தையும் முக்கூட்டுக்கமிட்டி வலியுறுத்தியது.

---

## வள்ளுவர் விழா

பொகவந்தலாவ, திங்கள்

பொகவந்தலாவ சென்மேரீஸ் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இன்று வள்ளுவர் விழா கொண்டாடப்படவிருக்கிறது. மேற்படி பாடசாலைஆசிரியர்களாலும் மாணவர்களாலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ்விழாவில் பல அறிஞர்கள் உரை நிகழ்த்தவிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'பொலிஸாரை நண்பர்களாய் கருதுங்கள்'

— பொலிஸ் இன்ஸ்பெக்டர்

உடுப்பிட்டி, ஞாயிறு

''அத்துளுவில் அநேக விவசாயிகள் வெங்காயப் பயிர்ச்செய்கையில் உற்சாகத்துடன் ஈடுபட்டுள்ளனர். இவர்களினால் உற்பத்தி செய்யப்படும் வெங்காயத்தை அரசாங்கம் நியாயமான விலையில் கொள்வனவு செய்யவேண்டுமென்று வற்புறுத்திவருகிறேன். படித்த இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபடவேண்டும். அரசாங்க உத்தியோகத்தை நம்பியிருப்பதில் பயனில்லை. விவசாயத்துறையில் உற்சாகத்துடன் இறங்கும் படித்தவாலிபர்களுக்கு காரியாதிகாரிகளும், கிராமசேவையாளர்களும், அரசாங்க அதிபர்களும் உதவிபுரிந்து உற்சாகப்படுத்தவேண்டும்'' என கரவெட்டி மேற்கு சிந்தாமணி விநாயகர் சனசமூக நிலையத்தின் 13வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டுக் கரவை மாணிக்கவாசக வித்தியாலயத்தில் நடைபெற்ற உடுப்பிட்டி அ. சிவசம்புப் புலவர் நினைவுவிழாவிற்கும் விவசாயப் போட்டிப் பரிசளிப்புவிழாவிற்கும் தலைமை வகித்துப் பேசுகையில் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் கூறினார்.

பண்டிதர் திரு. இ. க. முருகேசு பேசுகையில, இந் நூற்றுண்டில் வாழ்ந்த புலவர்களுள் உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் முதன்மையானவர். பிறநாட்டுப் புலவர்களுக்கு அடிக்கடி விழா எடுக்கும் நாம், நம்நாட்டுப் புலவர்களுக்கு விழா எடுக்கத் தயங்குவது வருத்தத்தை அளிக்கிறது என்று சொன்னார்.

பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வி. செல்லையா பேசுகையில் ''பொதுமக்கள் பொலிஸாரைத் தமது எதிரிகள் என்று நினைத்துப் பயப்படுகிறார்கள். பொலிஸார் பொதுமக்களைப் பாதுகாக்கவே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பொதுமக்கள் பொலிஸாரைத் தமது நண்பர்களெனக் கருதி நீதியை நிலைநாட்ட எம்முடன் ஒத்துழைக்கவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசபிள்ளை பேசும்பொழுது விவசாயிகள் உருளைக்கிழங்கு உற்பத்தியில் அதிக நாட்டம் கொள்ளவேண்டுமென்றும், பொதுமக்களின் தேவைகளையும், குறைகளையும் உடனுக்குடன் நிவர்த்தி செய்யத் தாம் முயலுவதாகவும் கூறினார்.

மற்றும் வித்துவான் க. நடராசா, திருவாளர்கள் க. பாலசுந்தரம், கா. சிவத்தம்பி, செ. பாலசுப்பிரமணியம், க. இரத்தினசிங்கம், கே. சிதம்பரப்பிள்ளை, வ. சின்னத்தம்பி, வீ. கதிரித்தம்பி உட்பட வேறுபலரும் பேசினர்.

செயலாளர் திரு. சி. க. நடராசா நன்றியுரை கூறினார்.

## சம்பந்தர் குருபூசை

அச்சுவேலி, ஞாயிறு

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை இந்து மாணவர் சங்கஆதரவில் மேற்படி பாடசாலைமண்டபத்தில் சங்கத்தலைவர் செல்வன் சு. இராசேஸ்வரன்தலைமையில் திருஞானசம்பந்தர் குருபூசைவிழாநேற்று நடைபெற்றது. 'சம்பந்தர் பேச்சுப் போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்றகீழ்ப்பிரிவு மத்தியபிரிவு, மேற்பிரிவு, மாணவர்களின் சொற்பொழிவுகள் இடம்பெற்றன.

தலைமை ஆசிரியர் பண்டிதர் ஆ. சின்னத்துரை சிரேஷ்ட உதவியாசிரியர் சி. நா. கந்தையா ஆசிரியை திருமதி ச. தம்பிராசா சங்க காரியதரிசி செல்வி செவரதநாயகி ஆகியோர் பேசினர்.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்

### திங்கள் 29-5-67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப் பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்.

6-15 பாட்டு, 6-45 கிராம சஞ்சிகை, 7-15 விவேகச் சக்கரம், 7-45 தமிழ் மூலம் சிங்களம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர் விருப்பம்.

## அம்மன் திருக்குளிர்ச்சி

செட்டிபாளையம், ஞாயிறு

கிழக்கிலங்கையில் இருக்கும் கண்ணகை அம்மன் ஆலயங்களுள் மிகப் பிரசித்தி பெற்ற செட்டிபாளையம் கண்ணகையம்மன் ஆலயத்தில் வருடந்தோறும் வைகாசித்திங்களில் நடைபெறும் திருக்குளிர்ச்சி விழா இம்முறை மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஐந்துதினங்கள் நடைபெற்ற இவ்வுற்சவத்துக்கு வழமைபோல் கிரான்குளம், குருக்கள் மடம், மாங்காடு, தேற்றாத்தீவு, களுதாவளை, ஆகிய கிராமங்களிலிருந்து ஏராளமான மக்கள் கலந்துகொண்டனர்.

## புதிய நிர்வாகிகள்

பலாலி, ஞாயிறு

தெல்லிப்பளைமுற்போக்கு ஐக்கிய வாலிபர் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர்புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. நா. பாலசிங்கம், உபதலைவர்: திரு. வ. முருகையா, காரியதரிசி: திரு. க. வி. என். புலேந்திரன், உதவிக்காரியதரிசி: திரு. எஸ். பரராஜசிங்கம், தனாதிகாரி: திரு. எஸ். தேவரத்தினம், உபதனாதிகாரி: திரு. கே. ராஜரத்தினம், போஜிகர்கள் திரு. வி. சின்னத்தம்பி, திரு. எஸ். செல்லையா, பத்திராதிபர் திரு. இ. கந்தசாமி. ஏழுபேர் கொண்ட அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஃ ஃ ஃ

யாழ்ப்காணம், திங்கள்

வடஇலங்கைத் தமிழாசிரியர்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில்நடைபெற்றது. இக்கூட்டத்தில்புதுவருடநிர்வாகிகளாகப் பின்வருவோர்தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: பண்டிதர் ச. பொன்னுத்துரை. உபதலைவர்கள்: ஐ. சிவசம்பு ஐ. பொன்னையா, இ. செல்வராசா. செயலாளர்: ஏ. கே. மாணிக்கம். உப செயலாளர் இ. துரைசிங்கம் பொருளாளர்: இ. பொ. குமாரசாமி, பரீட்சைக்காரியதரிசி: திரு. வி. வ. நல்லதம்பி. [ந. நி]

## 1000 சிரமதானிகள் கலந்துகொண்டனர்

கனகராயன்குளம், ஞாயிறு

''வன்னி நாட்டில் எத்தனையோ பழைய புராதனச் சிறப்பு வாய்ந்த கோவில்கள் தேடுவாரற்றுக் கிடக்கின்றன. இவற்றின் மகிமையை நாம் வெளிக்கொணர, புராதன புதுமை வாய்ந்த கோவில்களையும் புனருத்தாரணம் செய்து அவற்றின் மகிமையை யாவரும் அறியச்செய்தல் வேண்டும்'' என மூன்று முறிப்பு, கல்லிருப்பு கண்ணகி அம்மன்கோவில் வளவிலுள்ள காட்டை அழித்துச் சிரமதானம் மூலம் செப்பனிட்டபோது மாந்தைக் காரியாதிகாரி திரு. எஸ். லோகேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

நெடுங்கேணிக் காரியாதிகாரி திரு. ஜே. செந்தில்நாதன் உட்படப் பல பிரமுகர்கள் பிரசன்னமாகியிருந்தனர். 1000க்கு மேற்பட்ட மக்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.


அழகிய உடைகள் அணிய வேண்டுமா?
உடனே விரையுங்கள்
"பொகுமால்ஸ்"
சிறியோர் முதல் பெரியோர் வரை
பலவிதமான டிசைன்களில் தினுசுகள்
தைத்துக் கொடுக்க நகரிலே
சிறந்த ஸ்தாபனம்
பொகுமால்ஸ்
(C. W. E. பிடவை மாளிகை)
49, பிரதானவீதி, — யாழ்ப்பாணம்.





சாளி! நான் கேட்டது இதுவல்ல! ஜின் என்று சொல்லும்போது நான் கேட்பது—

மெஸ்தியா ஜின்னையே

ஏனென்றால் ......??

1. புதிய மெஸ்தியா ஜின் இரு முறை வடிக்கப்பட்டது.
2. புதிய மெஸ்தியா ஜின் வெற்றி கண்டதோர் விசேஷ வெளிநாட்டு முறைப்படி தயாரிக்கப்படுவது.
3. புதிய மெஸ்தியா ஜின் மிகப் புதுமையான பிரெஞ்சு யந்திரங்களால் செய்யப்படுவது.
4. புதிய மெஸ்தியா ஜின்கள் [கலப்பற்றதும், தோடம்பழ ரஸம் கலந்ததும்] மென்மையானவை — வெண்பட்டும் மஞ்சள் ஊதாவும் — ஆ! அதுதான்!
5. புதிய மெஸ்தியா ஜின்தான் 'கொக்டெயில்' பானத்துக்கு சிறந்த அஸ்திவாரம். அதுமட்டுமல்ல, சாளி நீ நினைக்கமுடியாத 'கொக்டெயில்' எல்லாவற்றையும் அது உருவாக்கும்.
6. புதிய மெஸ்தியா ஜின் ரொம்ப ரொம்ப சுத்தமானது—வெறி அம்மல் என்பதே கிடையாது. ஆனபடியால்தான், மேனை சாளி, நான் ஜின் என்று சொல்லும் போது

புதிய மெஸ்தியா ஜின்னையே குறிப்பிடுகிறேன்

இங்கே காணப்படும் நமது நண்பர் உண்மையிலேயே ரசித்து மதுவை அருந்துபவர். புதிய மெஸ்தியா ஜின்னை தாம் விரும்புவதற்கு ஆறு காரணங்கள் கூறியிருக்கிறார். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:— புதிய மெஸ்தியா ஜின்னை நீங்கள் விரும்புவதற்கு உங்களுடைய சொந்த காரணம் என்னவென்பதை எழுதி புதிய மெஸ்தியா ஜின் போத்தல் லேபல் ஒன்றுடன் புதிய மெஸ்தியா போட்டி மே/பா. விஷன் விளம்பரங்கள் லிமிடெட், 3-வது மாடி, மாக்கான் மரைக்காயர் கட்டிடம், கொழும்பு—1 என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

எத்தனை சீட்டுகளாவது அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு சீட்டோடும் ஒருபுதிய மெஸ்தியா ஜின் லேபல் சேர்க்கப் படவேண்டும். பன்னிரண்டு பரிசுகள் கொடுக்கப்படும். முதலாவது பரிசு சிங்கப்பூருக்குப் போய்வர ஓர் இலவச விமானடிக்கட் அல்லது அதற்குப் பெறுமதியான காசு. மிகக் கூடுதலான சீட்டுகள் அனுப்புபவருக்கு சென்னைக்குப் போய்வர ஓர் இலவச விமான டிக்கட் அல்லது அதற்குப் பெறுமதியான காசு. ஒரு விசேஷ நீதிபதி குழுவின் தீர்ப்பே முடிவானது. ஸ்ரீலங்கா டிஸ்ரிலறீஸ் லிமிடெட், விஷன் விளம்பரங்கள் லிமிடெட் ஆகிய ஸ்தாபனங்களில் வேலை செய்வோரும் அவர்களுடைய குடும்பத்தினரும் இந்தப் போட்டியில் பங்குபற்றலாகாது. போட்டிமுடிவு திகதி மே 31, 1967.

சிங்கப்பூருக்கும் சென்னைக்கும்

மெஸ்தியாவுடன் பறந்து செல்லுங்கள்

10 ஆறுதல் பரிசுகள் உண்டு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வு பெறுகிறுர்



யாழ்ப்பாணம் ஈ. ஏ. பாய் ஸ்தாபனத்தில் சேவை செய்துவந்த வட்டுக்கோட்டை, அராலி மேற்கைச் சேர்ந்த **நா. சம்பந்தர் அவர்கள்** எல்லோருடைய ஆதரவுடனும் சுமார் 45 வருடகாலமாகச்சேவைசெய்துவந்தபின் தற்போது ஒய்வு பெற்றுக் கொள்கிறுர். அவரது நீண்டகால சேவையின்போது அவருக்கு ஆதரவும் ஒற்றுமையும் ஊக்கமும் தந்துவந்த யாவருக்கும் அவர் நன்றியும் வணக்கமும் தெரிவிக்கிறுர். 2305

## கோழித்தீன்

கோழித்தீன் தயாரிப்பதற்கு வேண்டிய மருந்துகள்- தானியங்கள்-தவிடு-மீன் எண்ணை தொகையாக எம்மிடம் ஆனி மாதம் 15-ம் திகதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேம். மனேஜர், அருணு ஏஜென்ஸீஸ், அளவெட்டி.

1789

## விலையில் உயர்வு

சாவகச்சேரி, ஞாயிறு சாவகச்சேரிப்பகுதியில் மல்லி மூன்று ரூபாவாகவும் மிளகாய் மூன்றரை ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

யாழ். உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

# பாஷையூர், குருநகர் வெற்றி பெற்றன

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றுக் கொண்டிருக்குக் கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பாஷையூர் சென். அந்தனீஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற ஒரு பலப்பரீட்சையில் பாஷையூர் கோஷ்டியினர் வெற்றி பெற்றனர்.

ஆரம்பத்திலிருந்து முடிவு வரையும் இருகோஷ்டிகளின் விளையாட்டுத்திறனும் ரசிகர்களைக் கவர்ந்தது.

இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற போட்டியில் பாஷையூர் கோஷ்டி 3 கோல்கள் பெற்றிருந்தது. கிறீன் பீல்ட் 2 கோல்கள் பெற்றிருந்தது. இடைவேளைக்குப்பின் நடைபெற்ற போட்டி பெரும் மோதலாகவே காணப்பட்டது. எனினும் பாஷையூர் மேலும் ஒரு கோலை விளாசியது கிறீன் பீல்ட் விட்டுக் கொடுக்காமல் முன்னேறிக் கொண்டிருந்தது பாராட்டக் கூடியது. இப்போட்டி முடிவில் பாஷையூர் சென். அந்தனிஸ் விளையாட்டுக் கழகம் 4-2 கோல்களால் கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழகத்தை வென்றது.

### குருநகர் வெற்றி

குருநகர் ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கும் கிரூஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்ற மற்றொரு போட்டியில் ஆரம்பத்தில் இருந்து முடிவுவரையும் நன்ருகப் 'பாசிங்' செய்து ஆடிய குருநகர்க்கோஷ்டி கிரூஸ் கொப்பர்ஸ் கோஷ்டியை அமோக வெற்றியீட்டியது.

இப்போட்டியின் ஆரம்பத்தில் கடும் போட்டி போட்ட கிரூஸ் கொப்பர்ஸ் கோஷ்டியினர் பிற்பகுதியில் விட்டுக் கொடுக்கத் தொடங்கினர். இப்போட்டி முடிவில் குருநகர் ஐக்கிய விளையாட்டுக் கழகம் கிரூஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகத்தை 9-0 கோல்களால் அமோக வெற்றியீட்டியது.

## மரத்தால் விழுந்து மரணம்

கிளிநொச்சி, ஞாயிறு 45 அடி உயர பனை மரத்தில் ஏறிய சீவல் தொழிலாளியாகிய கந்தன் கணபதி [45] மரத்தினின்றும் விழுந்து கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானுர்.

இச்சம்பவம் கிளிநொச்சியை அடுத்த கண்டாவளை என்னும் கிராமத்தில் நடைபெற்றது. இதுசம்பந்தமாக விசாரணை செய்த கிளிநொச்சி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் விபத்தினுல் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

## மின்சாரமின்றிக் கஷ்டம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு இளவாலைக் கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் இதுவரை எவ்வித வேலையும் நடைபெறவில்லை. ஆலயங்கள் கல்லூரிகள் இதனுல் பெரிதும் கஷ்டமடைகின்றன.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணி:

பருத்தித்துறை V. M வீதியில் இரத்தினசிங்கம் வழக்கறிஞர் இல்லத்துக்கு முன்னுல் குடியிருப்பு நிலம் 2 3/4 இரண்டேமுக்கால் பரப்பும் பருத்தித்துறை கடற்கரை வீதியில் தபாற்கந்தோருக்கு அருகாமையில் தற்கால வீட்டிற்கு அத்திவாரம் போட்டபடி 1 1/2 ஒன்றரை பரப்பு குடியிருப்பு நிலம் விலைக்கு உள்ளது. விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். க. நவரத்தினசாமி, உபாத்தியாயர் இல்லம், ஓடக்கரை, பருத்தித்துறை. 1854

காணி:

யாழ்ப்பாண நகரில் நாலுபுறமும் மதில் சிவரும், கிணறுமுள்ள ஆறு பரப்புக் காணி முழுவதும் முப்பதாயிரம். இரண்டு பரப்பு துண்டுகளாகவும் வாங்கலாம். நேரில் வரவும். செல்லத்துரை, 271, நாவலர் வீதி, ஆனைப்பந்தி. 1861

காணி

நல்லூர் கனகரத்தினம் வீதியில் நாயன்மார்க்கட்டு குளத்திற்கு எதிரில் 17 பரப்பு நெற்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; மலேயன் ஸ்ருடியோ, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

1867

வீடும் வளவும்

கெக்கிராவ பட்டினசபை எல்லைக்குள் அரசாங்கக் கோட்டாவுடன்கூடிய அரிசி ஆலைப் பங்கு ஒன்று விற்பனைக்கு உண்டு. பங்கின் பெறுமதி ரூபா 10,000/-. குரும்பசிட்டியில் 4 பரப்பு விஸ்தீரணம்கொண்ட வீடும் வளவும் விற்பனைக்கு இருக்கிறது. விபரங்களுக்கு: விளம்பர இல. 1869, மே/பா, ஈழநாடு என்ற விலாசத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்.

1869

### தேவை

வான் விற்பனையாளர்:

வான் விற்பனையாளர் தேவை. பிணைப்பணம் 1000/- நற்சாட்சிப் பத்திரத்துடன் 4 மணிக்கு நேரில் வரவும். அலன் ரீ கொம்பனி, 32, ஆஸ்பத்திரிவீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

1863

மனேஜர்

கோண்டாவில் ப. நோ. கூ. சங்கப் பண்டகசாலைக்கு மனேஜர் தேவை. பின்வரும் தகுதியுடையவர்கள் 10-6-67-இல் கிடைக்கத்தக்கதாக காரியதரிசி ப. நோ. கூ. சங்கம், கோண்டாவில் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கலாம். [1] J. S. C. சித்தியடைந்தோர். [2] வயது 25—35. [3] வியாபார அனுபவமுடையவரும் கூட்டுறவுப் பயிற்சியும் உள்ளவர் ஆகவும், பிணை ரொக்கம் 1000 ரூபா. ஆதனம் ரூபா 2000. சம்பளம் ரூபா 100 ஆரம்பம். 1870

### WANTED

Teacher

Wanted immediately, Art or Arts & Crafts teacher of Govt. College of Fine Arts or any Govt. Approved school (English & Tamil) Apply Principal, Nuffield School for the Deaf & Blind, Kaithadi. 1866

புன்னலைக்கட்டுவன், ஞாயிறு பாடசாலை விளையாட்டிடங்களையும், புதிதாக பாடசாலைக்குச் சேர்ந்த நிலங்களையும் திருத்துவதற்குச் சிரமதான முறையை மேற்கொள்ளவேண்டும்மென்று, இம்முயற்சியில் பெற்றுர் - ஆசிரியர் சங்கங்களின் ஒத்துழைப்பைக் கோரலாமென்றும் கல்வியமைச்சின் நிரந்தரக்காரியதரிசி சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ராதாதான் சுட்டார் என்று கூற முடியும் ஆனுல் சுட்டதை நான் பார்க்கவில்லை”

## வாசு தொடர்ந்து சாட்சியம்

மைலாப்பூர், மே28

‘நான் ராதா சுட்டதைப் பார்க்காவிட்டாலும் ராதா தான் எம்.ஜி. ஆரைச் சுட்டார் எனக் கூறமுடியும். என எம். ஜி. ஆர். கொலை முயற்சி வழக்கு விசாரணையில் தொடர்ந்து சாட்சியமளித்த திரைப்படத் தயாரிப்பாளர் வாசு தெரிவித்தார்.

பிராஸிகியூஷன் தரப்பில் இரண்டாவது சாட்சியாக சாட்சியமளித்துவரும் திரு. வாசு மேலும் தமது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:-

எம்.ஜி.ஆருடன் அவரது வீட்டில் நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது எனக்கு இடதுபக்கமாக ஒரு மேசையின் பக்கத்தில் இருந்தார். சூட்டுச்சம்பவம்நடைபெற்ற பின்னர் மேசையையோ கதிரையையோ இடம்மாற்றி வைக்கவில்லை. எம்.ஜி. ஆர். தாம் இருந்த கதிரையை அரக்கினுரோ என்னவோ எனக்குத் தெரியாது.

வழக்கறிஞர்; எம்.ஜி.ஆர். எத்தனை தடவை சுடப்பட்டார்.

வாசு: ஒரு தடவை தான்,

வாசு தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

இந்த சம்பவத்தின்போது நானும் இருந்து விட்டேனே என்பது பற்றி நான் அச்சம் கொண்டிருக்கவில்லை. ஆனுல் எனது நெருங்கிய நண்பர் ராதா இன்னொரு நண்பரைச் சுடுவதற்காக சென்றபோது என்னையும் கூட்டிச் சென்றிருந்தாரே என்பது பற்றித்தான் எனக்குக் கவலை. அவர்தம்மைத்தாமே சுட்டதையும் பார்க்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது குறித்தும் எனக்குக் கவலை.

ராதா தம்மைத்தாமேஇரு தடவைகள்சுட்டுக்கொண்ட போதும் அவரது நிலை அவ்வளவு ஆபத்தானதாகமாறி விட்டதாக நான் கருதவில்லை; அப்படி நிகழவுமில்லை.

விசாரணையின்போது ஒரு கட்டத்தில் வழக்கறிஞர் வானமாமலை வாசுவைப்பார்த்து சக்கரபாணியின் (எம். ஜி. ஆர். சகோதரர்) வற்புறுத்தலின்பேரிலும் அவர் தம்மைத்தாமே பாதுகாத்துக்கொள்ளும் நோக்கத்துடனும் உண்மையை மறைக்கப்பார்க்கிறுர் எனவும் எதையும் பயப்படாது நடந்தவற்றைச் சொல்லுமாறும் கூறினுர்.

இதற்கு வாசு இவற்றை மறுத்து தாம் சம்பவம் பற்றிய உண்மையையே கூறுவதாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:—

சூட்டுச்சம்பவம் நடைபெற்றதும் எம். ஜி. ஆர். நிலைபற்றியே நான் கவலைப்பட்டேன்.

சுடுவதற்கு உபயோகிக்கப்பட்ட றிவால்வரை நான் எம்.ஜி. ஆர். வீட்டில் வேலை செய்யும் இரத்தினத்திடம் ஒப்படைத்தபோது இது பற்றிப் பின்னர் என்ன நடக்கப்போகிறது என்பதுபற்றி அதிகம் சிந்திக்கவில்லை.

முதலில் என்ன நடக்கிறதென்று பார்ப்போம். பின்னர் அதற்கேற்ப றிவோல்வர் விஷயத்தில் நடந்து கொள்வோம் என நினைத்தீரா என இக் கட்டத்தில் வழக்கறிஞர் கேட்டார்.

‘ஒருவரைச் சுடுவது சட்டப்படி தண்டனைக்குள்ளாக வேண்டிய குற்றம் என்பதும் இந்த விஷயம் பொலிசாரிடம் தெரிவிக்கப்பட வேண்டியதொன்று என்று எனக்குத் தெரியும். ஆனுல் அப்போதிருந்த தடுமாற்றத்தில் இவ்விதம் பொலிசில் தெரிவிக்க மறந்து போய் விட்டேன்’ என வாசு தெரிவித்தார்.

## இறந்துகிடந்தார்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் கன்னுதிட்டிச் சந்தியில் இறந்து கிடந்ததாகக் கருதப்படும் செல்லத்துரை அப்புத்துரை என்பவரின் மரணம் சம்பந்தமாக யாழ்ப்பாணம் பகுதி திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. இராசநாயகம் மரணவிசாரணை நடத்தினுர்.

மரணமானவரைப் பிரேத பரிசோதனைசெய்த டாக்டர் சுப்பிரமணியம் எக்காரணத்தினுல் மரணம் விளைந்தது எனச் சொல்ல முடியாதெனத் தெரிவித்ததால் மரணமானவரின் உள்ளுறுப்புகளை வைத்திய பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்ட மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார். [ந. நி]

## அறிவித்தல்

ஆனந்தா திருக்குறட்கலண்டர் சில பதிப்புகளில் 30-5-67 போயா தினம் என்று குறிப்பிட்டிருப்பது தவறென்பதையும் 31-5-67 புதன்கிழமையே போயாதினமென்பதையும் கலண்டர்அச்சாகிக்கொண்டிருக்கும்போது ஏற்பட்ட இம்மாற்றம் திருத்தப்படு முன்னரே சில பதிப்புக்கள் வெளியிடப்பட்டு விட்டன என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேம்.

**ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம. 2308**

## காணவில்லை

மாடும் கன்றும்:

ம. யே. குறியும் நிறம் நரை மாடும் கன்று நிறம் மாவெள்ளை 5·ந் திகதி காணவில்லை. கொண்டு வந்து தருபவருக்கு ரூபா 25 கொடுக்கப்படும். ம. இரத்தினம், 8/1, றக்கா ரேட், சுண்டிக்குளி. 1864

5-வது வெற்றி வாரம்

கெப்பிட்டல் [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை] விஜயா [மட்டுநகர்]

ஸ்ரீகிருஷ்ணு [திருமலை] நவா [கொம்பனித்தெரு] மொடேர்ன் [பண்டாரவளை]

விஜிதா [ஹட்டன்] வெலிங்டன் [யாழ்ப்பாணம்] தீவொளி [நுவரெலியா]

மொடேர்ன் [பதுளை]

தென்னகமெங்கும் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்.

ரவிச்சந்திரன்-ஜெயலலிதா

ரங்கராவ் - நாகேஷ்

ஆர். சரஸ்வதி,

மனோகர்,

சீதாலட்சுமி,

மாதவி,

கள்ளபாட்

நடராஜன்

திறம்பட நடித்து

தென்னகமெங்கும்

100 நாட்களுக்கு

மேல் ஓடிய

வெற்றிச் சித்திரம்.



ஈ. வி. ஆர். பிக்சர்ஸ்

குமரிப் பெண்

இசை: எம்.எஸ். விஸ்வநாதன்

டைரக்ஷன்: ராமண்ணு

ராஜா RAJAH

யாழ்ப்பாணம் JAFFNA

தினசரி 2-30, 6-30, 9-45

போயாதினங்களில் 4காட்சிகள்

ஜெய்சங்கர் - K. R. விஜயா

நடித்த

பெண்ணே நீ வாழ்க!

நியூ காலிங்கன்

[இணுவில்]

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறைதினங்களில் 2-30

எம்.ஜி.ஆர். - விஜயா

நடித்த

தாயின் மடியில்

மனோஹரா

[யாழ்ப்பாணம்]

சிவாஜி—பானுமதி

நடித்த

அறிவாளி

REGAL - JAFFNA

Time: 4-45, 7-00 p. m.

VON RYAN'S EXPRESS

9-45 p. m.

தேவிகா - ஆஷாபரேக்

நடித்த

கரானு [ஹிந்தி]

## எம். ஜி. ஆரையும் . . .

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

சாட்சி வாசு பதிலளிக்கையில் கூறியதாவது!

சூட்டுச் சம்பவம் நடந்த தினத்தில் அதாவது ஜனவரி 12-ம் திகதி நான்தான் எம். ஆர். ராதாவை எம். ஜி. ஆர். தோட்டத்துக்குக் கூட்டிச் சென்றேன். அதனுல் எம். ஜி. ஆருக்கு நான்தான் தீங்கு செய்துவிட்டதாகக் கருதினேன். இதனுல்தான் நான் அவரைப் பார்ப்பதற்கு முயற்சி செய்யவில்லை.

இந்த உலகில் எனதுஒரேயொரு நெருங்கிய நண்பன் எம். ஆர். ராதா. அவர் துன்பப்படுவதைப் பார்க்க நான் விரும்பவில்லை. அதனுல்தான் ராதாவைப்பார்க்கவும் முயற்சி செய்யவில்லை.

### வாசு மீண்டும் கண் கலங்கினுர்

ராதாவின் உடல்நிலைபற்றிக் கேட்கப்பட்டதும் வாசு கண்கலங்கினுர். சூட்டுச் சம்பவத்திற்கு முன்னர் எம். ஜி. ஆரின் உடல் மிக ஆரோக்கியமாக இருந்தது என்றுர்.

### வள்ளிக்கண்ணு செல்லப்பெயர்

வழக்கறிஞர்- வள்ளிக்கண்ணு என்பது யார்?

வாசு- அது வசந்தாவின் செல்லப்பெயர்.

வழக்- அந்த வசந்தாவுடன் நீர் இப்பொழுது வாழ்க்கை நடத்தவில்லையா?

வாசு- இல்லை. கடந்த 7 வருடமாக அவர் [வசந்தா] எங்கே என்று எனக்குத் தெரியாது.

வழக்- நீர் அவரை விவாகரத்துச்செய்து கொண்டீரா?

வாசு- விவாகரத்துச் செய்துகொண்டதாகச் சொல்ல முடியாது. அது நினைவில்லை. நாங்கள் இருவரும் பிரிந்துகொண்டோம்.

வழ - வசந்தாவை திருமணம் செய்துகொண்டதாவது உமக்கு நினைவிருக்கிறதா?

வாசு- ஆம். நாங்கள் திருமணம் செய்துகொண்டோம்.

எனது இப்போதைய மனைவியின்பெர் சுசீலா. பத்து வருடங்களுக்கு முன்னரே அவர் நடிப்பதைக் கைவிட்டார். சுசீலா கதாநாயகி பாத்திரங்களில் தான் நடித்திருக்கிறுர். ‘‘ஞானசௌந்தரி’’, ‘‘மோகன சுந்தரம்’’ ஆகிய படங்களில் அவர் நடித்திருக்கிறுர்.

வழக்கறிஞர்- நீங்கள் என்ன உடை உடுத்தியிருக்கிறீர்கள்?

வாசு- உங்களுக்கு எப்படித் தெரிகிறது. அது காதிப்பட்டு.

வழ- நேற்று.

வாசு- அதுவும் காதிப்பட்டுத்தான்.

வழ- எப்பொழுதுமே பட்டுத்தான் உடுப்பீர்களா?

வாசு- எப்பொழுதுமல்ல.

காங்கிரஸ் தியாகிகள் பட்டியலில் எனது பெயரும் இருக்கிறதா என்பது பற்றி எனக்குத் தெரியாது.

அரசியல் நடவடிக்கைகள் காரணமாக சிறைசென்றிருக்கிறேன். நான்கு, ஐந்து தடவை பொலிஸ் சிறையில் பாதுகாப்பிலிருந்திருக்கிறேன். ஆனுல் இதற்கு முன் ஒருபோதும் நீதிமன்றத்திற்குள் நுழைந்ததில்லை.

‘‘பெற்ருல்தான் பிள்ளையா’’ என்ற படம் ஒரு வெற்றிப்படம் என்றும் அதன் மூலம் தங்களுக்கு நல்ல இலாபம் கிடைத்ததென்றும் கூறிய வாசு, தாமும் தமது மனைவியும் இதுவரை பதினையாயிரத்திலிருந்து இருபதாயிரம் ரூபாய்வரை அந்தப்படத்திலிருந்து இலாபம் பெற்றிருப்பதாகத் தெரிவித்தார்.

## நாட்டிலும் நகரிலும

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

லாமிய, பௌத்த மதகுருமார்களும் அவ்வண்ணமே எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறுர்கள்.

இயற்கையின் போக்குக்கு விட்டுவிட்டால் இன்னும் இருபது வருடங்களில் பூமியின் நிலப்பரப்பில் ஒரு ஆளுக்கு ஆறு சதுர அடி நிலமே இருக்கும் என்று சிலர் கணிக்கிறுர்கள். உணவுப் பிரச்னை தலைக்கு மேல் போய்விடும். அடிக்கடி குழந்தைகளைப் பிரசவிப்பதால் சனங்களின் தேகாரோக்கியம் குன்றிவிடும்.

அப்படியானுல் என்ன செய்வது?

இந்துக்களின் நம்பிக்கைப்படி பூமியில் சனத்தொகை அதிகரித்தால் பூமாதேவி தலைப்பாரம் தாங்கமுடியாது திருமாலிடம் போய் முறையிடுவாள். திருமால் உடனே சனத்தொகையைக் குறைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார். உலகில் அடிக்கடி தோன்றும் கோர யுத்தங்களும் அவற்றுல் உண்டாகும் உயிரழிவும் திருமாலின் திருக்கிருத்தியங்கள் தாமா?

குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றி எழுதும்போது ஒரு விசித்திரமான செய்தி நினைவுக்கு வருகிறது. அவுஸ்திரேலியாவில் குடும்பக்கட்டுப்பாடு கிடையாதாம். அதற்கு மாருக அங்கே ‘பொழுது போக்குகளைக் குறைத்து பிள்ளைப் பேற்றைப் பெருக்கு’ என்பதுதான் தாரகமந்திரமாம். காரணம் என்ன தெரியுமா? அவுஸ்திரேலியா ஒரு ‘வெள்ளை’ நாடு. கறுப்புத் தோல் உள்ளவர்களுக்கு அங்கே இடம்தரமாட்டார்கள். இதனுல் அங்கே ஏராளமான நிலம் இருக்கிறது. சனத்தொகை குறைவு.

அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா, கனடா போன்ற நாடுகள் இங்கிருக்கையில், குடியேறுவதற்கு இடமில்லாமல் சந்திரனில் போய்க் குடியேற முயலுகிறேம்!

—வழிப்போக்கன்

### டட்லி - சாகிர்ஹுசேன்

## கனடாவில் சந்திப்பர்

கொழும்பு, ஞாயிறு

இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா அடுத்த மாதம் கனடாவுக்குச் செல்லும்போது இந்திய ஜனுதிபதி டாக்டர் சாகீர் ஹுசையினை அங்கு சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### நேசம்மா

ப. உ. சின்னத்துரை மலாயன் பெனசனியர் அவர்களின் அருமை மனைவியும், ..னகரெட்னம், இராசநாயகம், பேரின்பநாயகம், குணரெட்னம், அரியநாயகம், திருமதி ரே-ஞா. இராஜகுலசிங்கம், திருமதி அ, கி. ஜெயராஜசிங்கம் அவர்களின் அருமைத்தாயாருமான திருமதி நேசம்மா-சின்னத்துரை காலமாகிவிட்டார். அவர்களின் பூதவுடல் இன்று பிற்பகல் 4-30 மணியளவில் காரைநகர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும், 2407

இப்பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1967-ம் ஆண்டு மே மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org